கூட்ட எண் 16
2017 - 2018 -ம் ஆண்டு

நகராட்சி அலுவலகம்,
ஆரணி,
நாள் 28.03.2018.

**2018-ம் ஆண்டு மார்ச் மாதம் 28.03.2018ந் தேதி புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் ஆரணி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**பொருள்கள்**

1) இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2018ம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

2) இந் நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2018ம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

3) இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் பிப்ரவரி 2018ம் மாதத்திய நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்.

4) மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவண்ணாமலை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் அ6/3725/2017 நாள் 19.02.2018ல் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2017-2018ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ. 13.50 லட்சத்தில் நிர்வாக அனுமதி வழங்கி வரப் பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி கோட்டை விளையாட்டு மைதானத்தில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் | 1350000/- |

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம், மேலும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1547/இ1/2017)

5) ஆரணி நகராட்சிக்கு சொந்தமான அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN25AU6961க்கு இன்ஜின் ஆயில் மாற்றி பல மாதங்கள் ஆகின்றது. இதனால் வாகனம் அடிக்கடி பழுது ஏற்படுகிறது மேலும், வாகனத்தில் சிறுசிறு பழுதுகள் ஏற்பட்டுள்ளன.. அதனை சரி செய்ய மேற்படி வாகனத்தை கொள்முதல் செய்த நிறுவனமான ஜெயின் கார்ஸ் (மகேந்திரா & மகேந்திரா) வேலூர் பழுதுகள் சரி செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப் பெற்ற விலைப்புள்ளியில் செலவினம் ரு. 78000/- ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி வாகனத்தை பழுது சரி செய்ய ஆகும் மேற்படி, செலவினத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், 2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி வாகனம் ஜெயின் கார்ஸ் (மகேந்திரா & மகேந்திரா) திருவண்ணாமலை நிறுவனத்தில் விட்டு பழுதுகள் சரி செய்தற்கு உண்டான தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 0095/இ1/2018)

6) இந் நகராட்சி பொது சுகாதாரப் பிரவில் உள்ள TN25AX6476 டம்பர் பிளேசர் லாரியில் ஹைட்ராலிக் வேலை செய்யாத காரணத்தால் பழுது நீக்கம் செய்ய சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மற்றும் தோராய செலவினம் ரூ. 42.000/-க்கும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ்
   77 B மத்தலாங்குலத் தெரு, ரூ. 41500/-
   திருவண்ணாமலை
2. கண்ணம்மாள் ஆட்டோ ஒர்க்ஸ்,
   18 முத்து விநாயகர் கோயில் தெரு, ரூ. 42800/-
   திருவண்ணாமலை
3. திருமலை வெங்கடேஸ்வரா ஒர்க்ஸ்,
   கீழ்நாச்சிப்பட்டு, திருவண்ணாமலை ரூ. 43900/-

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ தி.மலை நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். 3.தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். 4. மேற்படி, செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.(கோப்பு எண் 541/எச்1/2018)

7) துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் செய்யாறு அவர்களின் கடிதம் ந.க.எண் 2833/இ4/2013 நாள் 17.01.2018 மற்றும் துப்புரவு ஆய்வாளர் குறிப்பின்படியும், நகரப் பகுதிகளில் நோய் தடுப்பு பணிகள் பாதிக்காத வகையில் 15 மார்ச் 2018 முதல் 15 ஜீன் 2018 வைர மூன்று மாதங்களுக்கு 20 (இருபது) தற்காலிக பணியாளர்களை நியமித்து நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்காக ஆகும் தோராய செலவினம் ரூ. 5.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1. பொது சுகாதாரம் டெங்கு மற்றும் சிக்குன் குனியா நோய் தடுப்பு பணி அத்தியாவசியம் என்பதால், 15 மார்ச் 2018 முதல் 15 ஜீன் 2018 வைர மூன்று மாதங்களுக்கு 20 (இருபது) தற்காலிக பணியாளர்களை நியமித்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு எண் 1537/2012/எச்1)

8) இந் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. A. ரவி என்பவர் புதியதாக இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க முன் பணம் தொகை ரூ. 50000/- வழங்க கோரியுள்ளார். எனவே, அரசாணை எண் 467/நிதி/ நாள் 22.09.2009ன்படி முன்பணம் தொகை ரூ.50000/- வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 3076/2017/பி2)

9) இந் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 2018-2019 முதல் 2020-2012 ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 15-03-2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்களை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏல விபரம் | உச்ச ஏலத் தொகை கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரப்பட்ட தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர்,முகவரி மற்றும் தொகை ரூ. | சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ. | மூன்று ஆண்டு சராசரி ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் | ஏலம் கோர யாரும் தொகை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் வரும் பேருந்துகளுக்கு மட்டும் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | செலுத்தப்படவில்லை | | வழங்க வில்லை | | |
| 2 | டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் சுக்கு, காபி, முறுக்கு, இட்லி, ரொட்டி, பழம் ஆகிய இதர தட்டுக் கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 3 | மாடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்தல் | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 4 | மாடு அறுக்கும் இடத்தில் உள்ள 10 கடைகளில் கட்டணம் வசூல் செய்தல் | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 5 | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புளிய மரங்கள், இலவம் பஞ்சு மரங்கள், மா மரங்கள், தென்னை மரங்களின் மேற்பயனை மட்டும் அனுபவித்தல் | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்படவில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 6 | புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை | திரு. பரசுராமன் எண் 26 டாக்டர் அம்பேத்கார் நகர், ஆரணி | **ரூ.811288/-** | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | 670100/- | 704163/- |
| 7 | புதிய பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (நகராட்சி நிர்ணயிக்கும் இடம் மற்றும் அளவுப்படி) | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்படவில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 8 | சூரியகுளம் மீன் பிடித்தல் குத்தகை | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்படவில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 9 | டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை | ஜி. திலகவதி எண். 43 வி.ஏ.கே. நகர் ஆரணி | ரூ.414860/- | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | 342800/- | 360226/- |
| 10 | டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (நகராட்சி நிர்ணயிக்கும் இடம் மற்றும் அளவுப்படி) | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்படவில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |

**அலுவலக குறிப்பு** :- 1. வரிசை எண் 6க்கு திரு. ஆர். பரசுராமன் த/பெ ராமசாமி எண் 26 டாக்டர் அம்பேத்கார் நகர், ஆரணி என்பவர் சென்ற ஆண்டைவிட ரூ. 141188/- கூடுதலாகவும், மூன்று ஆண்டு சராசரியை விட ரூ. 107125/- கூடுதலாக ஏலம் கோரியுள்ளார். எனவே, இவரது உச்சக் கேள்வியை ஊர்ஜிதம் செய்யலாம். மேலும், பணி உத்தரவு வழங்கலாம். 2. வரிசை எண் 09க்கு திருமதி. ஜி.திலகவதி க/பெ கோவிந்தராஜன் எண் 43. வி.ஏ.கே. நகர் ஆரணி என்பவர் சென்ற ஆண்டை விட ரூ72060/- கூடுதலாகவும், மூன்று ஆண்டு சராசரியை விட ரூ.54634/- கூடுதலாக ஏலம் கோரியுள்ளார். எனவே, இவரது உச்சக் கேள்வியை ஊர்ஜிதம் செய்யலாம். மேலும், பணி உத்தரவு வழங்கலாம். 3. வரிசை எண் 1,2,3,4,5,7,8,10 ஆகிய இனங்களுக்கு ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை. என்வே, இவ்வினங்களுக்கு மறு ஏலம் கோரலாம். (ந.க.எண். 206/அ3/2018)

10. இந் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு 2018-2019 முதல் 2020-2012 ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 27.03.2018 அன்று இரண்டாவது முறையாக மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்களை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏல விபரம் | உச்ச ஏலத் தொகை கோரியவர்களின் பெயர் மற்றும் முகவரி | ஏலம் கோரப்பட்ட தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர்,முகவரி மற்றும் தொகை ரூ. | சென்ற ஆண்டு ஏலத் தொகை ரூ. | மூன்று ஆண்டு சராசரி ரூ |
|---|---|---|---|---|---|---|
| 1 | டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் வரும் பேருந்துகளுக்கு மட்டும் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 2 | டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையங்களில் சுக்கு, காபி, முறுக்கு, இட்லி, ரொட்டி, பழம் ஆகிய இதர தட்டுக் கடைகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 3 | மாடு அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்தல் | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 4 | மாடு அறுக்கும் இடத்தில் உள்ள 10 கடைகளில் கட்டணம் வசூல் செய்தல் | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 5 | நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புளிய மரங்கள், இலவம் பஞ்சு மரங்கள், மா மரங்கள், தென்னை மரங்களின் மேற்பயனை மட்டும் அனுபவித்தல் | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 6 | புதிய பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (நகராட்சி | ஏலம் கோர யாரும் தொகை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | நிர்ணயிக்கும் இடம் மற்றும் அளவுப்படி) | செலுத்தப்பட வில்லை | | | | |
| 7 | சூரியகுளம் மீன் பிடித்தல் குத்தகை | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |
| 8 | டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (நகராட்சி நிர்ணயிக்கும் இடம் மற்றும் அளவுப்படி) | ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை | - | ஒப்பந்தப்புள்ளி யாரும் வழங்க வில்லை | - | - |

அலுவலக குறிப்பு :- 1. வரிசை எண் 1,2,3,4,5,6,7,8 ஆகிய இனங்களுக்கு மறு ஏலம் கோரியதில் ஏலம் கோர யாரும் தொகை செலுத்தப்பட வில்லை. மேற்படி, 2 மற்றும் 6 ஆகிய இனங்களுக்கு நிதி இழப்பு ஏற்படா வண்ணம் இலாகா மூலம் வசூல் செய்யலாம். மேலும், இவ்விரு இனங்களுக்கு இந்நகராட்சியில் பணிபுரியும் இரணடு பணியாளர்களை நியமிக்கலாம். 3.மேற்படி இனங்களுக்கு மறு ஏலம் கோர மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 206/அ3/2018)

11 இந் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. S. கார்த்தி என்பவர் புதியதாக இருசக்கர மோட்டார் வாகனம் வாங்க முன் பணம் தொகை ரூ. 56830/- வழங்க கோரியுள்ளார். எனவே, அரசாணை எண் 467/நிதி நாள் 22.09.2009ன்படி முன்பணம் தொகை ரூ.50000/- வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதி அளிக்கலாம். (கோப்பு எண் 3077/2017/பி2)

12 மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை அவர்களின் தலைமையில் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் தொடர்பாக 20.02.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குள் அமையப் பெற்றுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த, மனைப்பிரிவுகளின் வரைபடம், மனைப் பிரவுகள் அமைந்துள்ள சர்வே வார்டுக்கான சர்வே வரைபடம் மற்றும் சர்வே பதிவேடு நகல் ஆகியவற்றை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் வேலூர் அவர்களுக்கு ஒளி நகல்கள் தொகுத்து அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி, மனைப்பிரவு வரைபடங்களின் ஒளிநகல்கள் மற்றும் அதற்கான சர்வே வரைபடங்கள், சர்வே வார்டு, பிளாக் வாரியாக A0 அளவு ஒளிநகல்கள் மற்றும் சர்வே பதிவடு A3 அளவு ஒளி நகல்கள் எடுக்க தோராய செலவினம் ரூ.6000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம். 2. அவசரம் அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். 3. மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1143/எப்1/2017)

13 ஆரணி நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் தெருவிளக்குகள் பராமரிக்க தேவையான மின்உபகரணங்கள் தீர்ந்து விட்டதால், தெருவிளக்கு புகார்களுக்கு மின்விளக்குகள் அமைக்க இயலவில்லை. எனவே, பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு தற்சமயம் எதிர்வரும் ஏப்ரல் 2018 முதல் செப்டம்பர் 2018 வரை உள்ள காலத்திற்கு தேவையான மின்உபகரணங்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். (கோப்பு எண் 524/இ1/2018)

14 ஆரணி நகராட்சியில் குடிநீர் நிதி 2017-2018ம் ஆண்டிற்கான பின்வரும் பணி மேற்கொள்ள 20.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கலாம் ஆணையர் ஒப்புதலுக்கு

| வ. எண் | பணியின் விவரம்<br>குடிநீர் நிதி | மதிப்பீடு ரு. லட்சத்தில் | ஒப்பந்ததாரர் விவரம்<br>திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் 1.கமண்டல நாகநதி தலைமை நீரேற்று நிலையம், 2. தச்சூர் தலைமை நீரேற்று நிலையம், 3 ஆற்காடு தரைப்பாலம் நீரேற்று நிலையம், 4. ஆற்காடு முப்பதுவெட்டி தலைமை நீரேற்று நிலையம் ஆகிய நான்கு நீரேற்று நிலையங்களில் திரவ குளோரினேஷன் நிரப்பும் பணிகள் செய்த | 2.60 | M/s ஹைடெக் பம்ப்ஸ் சென்னை 89<br>M/s ஆகாஷ் பம்ப்ஸ் சென்னை - 53 | 0,64 % குறைவு<br>3,85%. அதிகம் |
| 2 | ஆரணி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோக லாரி பழுது பார்த்தல் பணி | 1.31 | M/s ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ தி.மலை<br>M/s திருமலை வெங்கடேஸ்வரா ஒர்க் ஷாப், தி.மலை | ரூ. 130851/-<br>ரூ.132900/- |
| 3 | ஆரணி நகராட்சி பகுதியில் உள்ள சிறுமின் விசை பம்புகள் பழுது பார்த்தல் பணி | 1.00 | பி. சந்திரசேகர்<br>இ.இளங்கோவன் | 0.73 %குறைவு<br>1.72%.அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகள் குடிநீர் அத்தியாவசிய பணிஎன்பதால், தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிகளுக்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 690/இ1/2017)

15 திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலை கோடைவிழா மற்றும் கூட்டுறவு வங்கி தலைமையக புதிய கட்டிட திறப்பு விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு திண்டுக்கல் S.சீனுவாசன், தமிழக வனத்துறை அமைச்சர், மாண்புமிகு செல்லூர் K. ராஜீ, தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சர், மாண்புமிகு வெல்லமண்டி K.நடராஜன், தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர், மாண்புமிகு சேவூர் இராமச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர்களை ஆரணி நகராட்சி சார்பாக தினமலர் நாளிதழில் 17.06.2017 அன்று வரவேற்பு விளம்பரம் செய்தமைக்கு உண்டான விளம்பர கட்டணம் ரூ.18400/-யினை தினமலர் நாளிதழ் வேலூர் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 690/2017/இ1)

16 ஆரணி நகரப் பகுதிகளில் நகராட்சிக்கு சொந்தமான பொது பயன்பாட்டிற்கான இடங்கள் பூங்காக்கள் மற்றும் சுடுகாடு முதலிய இடங்களை தெரிவு செய்து Micro Composting முறையில் அறிவியல் ரீதியாக அந்தந்த பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உரமாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், ஏற்கனவே வழங்கப்பட்ட திருத்திய நிர்வாக அனுமதியின்படி உள்ள ரூ.257.00 லட்சத்தில் தள்ளுவண்டி, டிப்பர் லாரி வாங்கியதற்கான தொகை போக மீதமுள்ள தொகை ரூ.232.40 லட்சம் தொகையில் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து திருத்திய நிர்வாக அனுமதி பெற கருத்துரு அனுப்ப அறிவுறுத்தியதின் அடிப்படையில், ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கி செயல்படுத்தாத பணிகளுக்கு பதிலாக, தற்போது நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் Micro Compostiong கட்டமைப்பு ஏற்படுத்தும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை - 5 அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண் 29659/ப்பி3/2016 நாள் 23.03.2018ல் பின்வருமாறு திருத்திய நிர்வாக அனுமதி வழங்கி வரப் பெற்ற கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**Table 3** **(Rs.in.lakhs)**

| S.No | Description of Vehicle and works as per Administrative Sanction | As accorded as per the Proceeding Number 29886/2016/ P3. Dated 22.11.2016 | Revised AS - 1 accorded as per the Pro.No. 11088-29/2017/P3. Dated 24.05.17 | Desctiption of Works | Estimated Cost as per the Revised Administrative -2 |
|---|---|---|---|---|---|
| 1 | Purchase of Containerized Push carts – 14 Nos | 2.80 | 2.80 | Completed | |
| 2 | Purchase of Mini Tipper Lorry 8.5 cu.m capacity – 1No | 16.00 | 16.00 | | |
| 3 | Construction of Municipal Solid Waste Processing facilities including (i)Supply and erection of pre processing, processing refinement, such as receiving conveyors, manual segregation conveyor, feeding conveyor, 100/75 mm trammel, accept conveyor, reject conveyor cum manual sorting conveyor, Organic shredder, organic shredder output conveyor and refinement section of mechanical screener with conveyors of input with chute and manure and output conveyor. Resource recovery center with sorting conveyor, plastic pulveriser, baling machine, dry washer and control panel. | 254.00 | 164.00 | Construction of Micro Compost centre at Municipal Office Compound OHT back side in Ward No. 31 with processing capacity of 4 TPD | 40.00 |
| | | | | Construction of Micro Compost centre at kannappan nagar (Shabashkhan Street) in Ward No.13 with processing capacity of 4 TPD | 40.00 |
| | | | | Construction of Micro Compost centre at Balaji Nagar in ward No. 25 with processing capacity of 4 TPD including of Compound wall | 43.00 |
| | (ii)Constrction of Windrow compost pad (with available compost pad of 3000 sq.m) | | | Construction of Micro Compost centre at Gandhi nagar in ward No.29 with processing capacity of 4 TPD | 38.00 |
| | (iii)Construction of 1/3rd roof for over the compost pad. | | | Construction of Micro Compost centre at jayalakshmi Nagar ward No. 30 with processing capacity of 4 TPD | 57.00 |
| | (iv)Pre processing shed for machineries | | | Providing Approach road to existing Compost yard in w – 14 | 14.40 |
| | (v)Dozing cum tilting vehicle | | | | |
| 4 | (i)Construction of Administration building | 68.40 | 68.40 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (ii)Construction of Labour rest room | | | | |
| | (iii)Construction of watchman shed | | | | |
| | (iv)Providing water supply arrangements | | | | |
| | (v)Providing Electrical Arrangement | | | | |
| | (vi)Construction of Manure Godown | | | | |
| | (vii)Construction of Compound wall | | | | |
| | (viii)Providing Internal Road | | | | |
| | (xi)Providing Green Belt | | | | |
| 5 | IEC | 5.80 | 5.80 | Completed | |
| | **Total** | **347.00** | **257.00** | | **232.40** |

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி பணிகளுக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 999/இ1/2016)

17 இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் SBM திட்டத்தில் நகரில் தனிநபர் கழிவறை கணக்கெடுப்பு செய்யப்பட்டு 1266 கட்டிமுடிக்கப்பட்டு அதற்கான தொகையும் வழங்கப்பட்டு விட்டன. மேலும், தற்சமயம் பரப்புரையாளர்கள் (ம) மேற்பார்வையாளர்கள் நகரப்பகுதிகளில் வார்டுவாரியாக தனிநபர் கழிவறையில்லாத குடியிருப்புகள் மறு கணக்கெடுப்பட்டதில் 1286 குடும்பங்களுக்கு கழிவறை கட்டப்பட வேண்டியுள்ளது. 12.03.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நடைபெற்ற SBM ஆய்வுக் கூட்டத்தில் பயனாளிகள் பட்டியல் நிர்வாகம் மூலம் ஒப்புதல் பெற்று அனுப்பி வைக்க அறிவுறுத்தியுள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி, கழிப்பறை இல்லாத குடியிருப்புகள் 1286க்கு புதியதாக SBM மூலம் கட்டித்தர மான்யத் தொகை விவரம் 1. மத்திய அரசு மான்யம் 1286 X 4000 = 5144000/- 2, மாநில அரசு மான்யம் 1286 X 2000 = 2572000/- 3, நகராட்சி மான்யம் 1286 X 2000 = 2572000/- மேற்கண்ட விவரப்படி மத்திய அரசு மானியமும், மாநில அரசு மானியம் அரசிடமிருந்து கோரி பெற பிரேரரனை அனுப்பவும், நகராட்சி மான்யம் நகராட்சி நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 620/2018/எச்1)

18 இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் டம்பர் பிளேசர் TN25AZ1101 தகுதிகாண் சான்று காலம் முடிவடைவதால், மேலும் ஓராண்டு காலம் நீட்டிப்பு செய்ய வேண்டியுள்ளதால், பழுதுகள் சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளி கோரியதில், கீழ்கண்டவாறு வரப் பெற்றுள்ளதையும், அதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ் தி.மலை நிறுவனம் விலைப்புள்ளிகளை மதிப்பீடாக கருதி மேல்நடவடிக்கை தொடரவும்,ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும்தோராய செலவினம் ரூ.315000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ் நெ. 77B மத்தலாங்குலத் தெரு, தி.மலை - ரூ. 314200/-
2. கண்ணம்மாள் ஆட்டோ ஒர்க்ஸ்,நெ.18 முத்துவிநாயகர் கோயில் தெரு திருவண்ணாமலை - ரூ. 318975/-
3. ஸ்ரீமுனிரத்தினம் ஆட்டோ மொபைல்ஸ், நெ.14 கிழக்கு கிராஸ் ரோடு காந்தி நகர், திருவண்ணாமலை - ரூ. 319860/-

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். 3. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1598/2017/எச்1)

19 **இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் டம்பர் பிளேசர் லாரி** TN25AZ1101**யை பழுது நீக்கம் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து** 27.09.2017 **அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது**.

1. **ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ் நெ**. 77B **மத்தலாங்குலத் தெரு**, **தி**.**மலை** - **ரூ**. 314200/-
2. **கண்ணம்மாள் ஆட்டோ ஒர்க்ஸ்**,**நெ**.18 **முத்துவிநாயகர் கோயில் தெரு திருவண்ணாமலை** - **ரூ**. 316940/-

**அலுவலக குறிப்பு** :- 1. **மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்**. 2. **குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜவஹர் ஆட்டோ ஒர்க்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி மன்றம் ஏற்கலாம்**. 3. **அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்**. (**கோப்பு எண்** 1598/2017/**எச்**1)

20 ஆரணி நகராட்சியில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017-2018ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள **21.03.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்றுன்ன ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியினி விவரம் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரணி நகராட்சி கோட்டை விளையாட்டு மைதானத்தில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளுதல் | 13.50 | S. உஷாரானி<br>E. இளங்கோவன் | 0.06 % குறைவு<br>0.80 % அதிகம் |

அலுவலக குறிப்பு :- மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். மேலும், மேற்படி பணிகள் குடிநீர் அத்தியாவசிய பணி என்பதால், தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம் (ந.க.எண் 1547/இ1/2017)

21 இந் நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்காக A4 பேப்பர் முழுவதுமாக தீர்ந்து விட்ட காரணத்தினால், பேப்பரின் தேவை காரணமாக உள்ளூர் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி அங்கீகரித்தும், A4 பேப்பர் ரீம்கள் (250 ரீம்கள்) வாங்கியமைக்கும், அதற்கான செலவினம் ரூ. 50,000/-ற்கு (ரூபாய் ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அவசர அவசியம் கருதி உள்ளூர் கடைகளில் விலைப்புள்ளி கோரி மேற்கண்ட செலவினத்தை SEC 15ல் செய்தமைக்கும், அதற்கான தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 1143/பி3/2015)

22 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 82இன்படி நியாமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில் நகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6Aன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம் சட்டம் - 2018 (2018, தமிழ்நாடு சட்டம் 6) இல், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(1) (சி) க்கு கீழ்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

**AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920**

5, In Section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920, in Sub-Section (1)

{1} For clause (C), the following clause shall be substituted, namely.

" (C) Buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other Local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose of sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the Council.

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting Self – Financing courses shall be subject to levy of property tax"

(1) In the proviso, for the Expression " clauses (a), (c) and (e)", the expression "clauses (a) and (e)" shall be substituted.

ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவன கட்டிடங்கள் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்திவரும் கல்வி நிறுவனங்கள் கட்டிடங்கள் மீது சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

- ❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி)க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்.
- ❖ தமிநாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்துவரி விதிக்கவும்.
- ❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி)க்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்.
- ❖ கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்
- ❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி)க்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017-18 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்
- ❖ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 78 (3)ன்படி, ஆட்சேபனைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கு மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 78(3) ன்படி, மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிகக்ப்பட்டுள்ளதை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 2243/அ1/2017)

23 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 82ன்படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராட்சியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும்,

வரிவிதிப்பு விதி 6-A ன்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (இரண்டாம் திருத்தம்) சட்டம் -2018, (2018, தமிழ்நாடு சட்டம் 6) ல், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83 (1) (சி) க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 78(3) ன்படி, மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய உத்தேசிகக்ப்பட்டுள்ளதை அறிவிப்பு செய்யப்படுகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்குப்பின்னர் சொத்துவரி விதிப்பினை மேற்கொள்ளுவது குறித்து இறுதிசெய்யப்படும். எனவும், மேற்குறிப்பிட்ட சொத்துவரி விதிப்பு குறித்து ஆட்சேபனைகள் ஏதுமிருப்பின், அதனை 30 நாட்களுக்குள், எழுத்து மூலமாக ஆணையர் ஆரணி நகராட்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என தெரிவித்து தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 50000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 2243/அ1/2017

24 இந்நகராட்சியின் 2018-2019ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு (Budjet Estimate) தயார் செய்த மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு எண் 849/2018/பி1)

25. ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய பேருந்து நிலையம் அருகில் பள்ளிக்கூடத் தெரு மற்றும் காந்தி ரோடு சந்திப்பில் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் வெளியே செல்லும் இடத்தினை ஒட்டி சர்வே வார்டு சி பிளாக் 3, நகரளவு எண் 88-ல் முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுறுவச் சிலை உள்ள வளாகத்திலேயே, மறைந்த முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் வெண்கலத்திலான திருவுருவச் சிலையை அமைக்க திரு. க. சங்கள் வழக்கறிஞர் , பிரிவு செயலாளர், ஆரணி அவர்கள் விண்ணப்பம் அளித்துள்ளார். சிலை அமைப்பது தொடர்பாக உச்ச நீதிமன்றம் special Leave to Appeal (Civil) No. (S) 8519/2016-ல் நாள் 18.01.2013 அன்று வழங்கியுள்ள தீர்ப்புரையில், We further direct that hence forth. State Government shall not grant any permission for Installation of any statue of Construction of any structure in public roads. Pavements. Sideways. And other public utility places. என உத்தரவு பிறப்பித்துள்ளது. தற்போது மறைந்த முன்னாள முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் வெண்கலத்திலான திருவுருவச் சிலையை அமைக்க கோரும் இடத்திற்கும், மேற்குறிப்பிட்ட உச்ச நீதிமன்ற உத்தரவு பொருந்தும். எனவே, சிலையை அமைக்க அனுமதி கோரி வரப் பெற்ற விண்ணப்பத்தினை மாவட்ட ஆட்சியர் திருவண்ணாமலை அவர்களின் வழியாக அரசின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :- மனுதாரர் கோரிக்கை மீது உரிய உத்தரவு பிறப்பிக்க அரசின் பரிசீலனைக்கு மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை அவர்களின் வழிமுறையாக அனுப்ப மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (கோப்பு எண் 474/எப்1/2018

தனிஅலுவலர்,
ஆரணி நகராட்சி